3215

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 3. Vol 3. | வெகுதான்யவஸ் மாசி மீ 1௳ பிப்ரவரி—1939 | இதழ் 11. No. 11.

திருப்புகழ்.

பழநி—(திருவாவினன்குடி)

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி

ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்

ஏறுமயில் வாகனகு காசரவ ணனைனது
ஈசனென மானமுன தென்றுமோதும்

ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னவிலனே
ஏவர்புகழ் வார்மறையு மேன்சொலாதோ

நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே

நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல்வேலா

சீறிவரு மாறவுண னுவியுண மானேமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடஞ்

சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே.

பதவுரை.

மாழை பொரு - பொன்னைப் போன்ற நிறத்துடன், நீறுபடு மேனியவ திருநீறு படிந்துள்ள திருமேனியை யுடையவரே !, வேல - வேலாயுதரே!, அணி - அழகியதும், நீல - நீலநிறத்துடன் கூடியது மாகிய, மயில் வாக - மயிலை வாகனமாக வுடையவரே !, உமை தந்தவேளே - உமையம்மையார் பெற்றருளிய குமாரமூர்த்தியே !, நீசர்கள் த(ம்) மோடு - கொடிய அசுரர் களுடன், எனது தீவினை எ(ல்)லாம்மடிய - அடியேனது கொடுவினையனைத் தும் அழிந்து போக, நீடு தனி வேல்விடு - நெடியதும் நிகரற்றது மாகிய வேற்படையை விடுத்தருளிய, மடங்கல் வேலா - ஊழித் தீயைப்போன்ற உக்ரமான வேற்படையை யுடையவரே !, சீறிவரும் மாறு அவுணன் - கோபித்து வருகின்றவனும் பகைமையை யுடையவனுமாகிய கஜமுகன் என்னும் அசுரனது, ஆவி உ(ண்)ணும் - உயிரைப் போக்கிய, ஆனைமுக தேவர் துணைவா - யானைமுகத்தையுடைய விநாயகப் பெருமானுக்கு அருந்துணைவரே !, சிகரி அண்டகூடம் சேரும் - கோபுரமானது வானுல கம் வரை ஓங்கியுள்ள, அழகு ஆர்பழநி வாழ்குமரனே - பெருவனப்பு நிறைந்த பழநி மலையில் உறைகின்ற குமாரக்கடவுளே !, பிரம தேவர் வரதா- அயன் முதலிய அமரர்கட்கு வரத்தைக் கொடுப்பவரே !, முருக - தெய்வத் தன்மையுடையவரே !, தம்பிரானே - தலைவரே !, ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் என்று - ஆறுமுகம் என்ற உமது திருப்பெயரை ஆறுமுறை கூறி, பூதி - திருநீற்றை, ஆகம் அணி மாதவர்கள் - உடம்பில் தரித்துக்கொள்ளும் பெருந்தவமுடையார்களது, அடியார்கள் பதமே துணை அது என்று - தொண்டர்களினுடைய திரு வடித்தாமரைகளையே பற்றுக் கோடாக் கொண்டு, நாளும் - நாள் தோறும், ஏறுமயில் வாகன - ஆண்மயிலை வாகனமாகக் கொண்டவரே !, குகா - ஆன்மாக்களின் இதயதாமரையில் உறைபவரே !, சரவண - சரவண தடாகத்தில் தோன்றியவரே !, எனது ஈசா - என்னுடைய தலைவரே !, என மானம் உனது என்று - "அடியேனுடைய மானம் உம்முடையதே" என்று சொல்லி, மோதும் - மோதிக்கொள்ளுகின்ற, ஏழைகள் வியாகுலம் இது ஏது என வினவில் - ஏழைகளைக்கண்டு, "உமக்கு இது என்ன கவலை" என்று நீர் அறியாதவரைப்போல் கேட்பீரேயானால், உனை எவர் புகழ்வார் - தேவரீரை அருட்கடல் என்றும் சர்வக்ஞர் என்றும் யார்தான் புகழ்வார்கள்?, மறையும் என் சொலாதோ - உம்மைப் பலவாறுகத்துதிக்கும் வேதந்தான் என்ன சொல்லமாட்டாது ?.

பொழிப்புரை.

திருநீறுபூசிய பொன்போன்ற திருமேனியரே! வேலாயுதரே! அழகிய நீலமயில் வாகனரே! உமாதேவியின் திருப்புதல்வரே! கொடிய அசுரர்களுடன் அடியேனுடைய தீவினைகள் முழுதும் அழிந்து போக நிகரற்ற நெடிய வேற்படையை விட்டருளிய ஊழித்தீயைப்போல உக்ரமுடைய வேற்படையை யுடையவரே! பகைகொண்டு சினத்துடன் வந்த கஜமுகாசுரனது ஆவியைப் போக்கிய கரிமுகக் கடவுளாம் கணபதியின் சகோதரரே! கோபுரங்கள் அண்ட கூடம் வரை ஓங்கி அழகு செய்யும் பழநி மலையின்மேல் உறைகின்ற குமாரக்கடவுளே! பிரமாதி தேவர்களுக்கு வரத்தைக்கொடுக்கும் வரதராஜரே! முருகப் பெருமானே! எப்பொருட்குந் தலைவரே! ஆறுமுகம் ஆறுமுகம் என்று ஆறு முறை ஓதி திருநீற்றை அன்புடன் உடம்பில் அணிந்து கொள்ளும் மாதவர்களுடைய அடியார்களது பாதமலரே உற்றதுணையென்று நம்பி, "ஏறுமயில் வாகன! குகா! சரவண! ஈசா! என்னுடையமானம் உம்முடையதே" என்று உம்மிடம் நாள்தோறும் மோதிக் கொள்ளுகின்ற ஏழைகளுடைய துன்பத்தைக் கண்டு, (நீர் எல்லாம் அறிந்தவாயிருந்தும் ஒன்றும் அறியாதவர்போல்) உமக்கு யாது துன்பம்? என்று வினவுவீராகில் உம்மை (சர்வக்ஞரென்றும் தீனபந்து என்றும் அருளாகரரென்றும்) யார்தாம் புகழ்வார்கள்? (உம்மையே பரம் என்று முழங்கிக் கூறும்) வேதந்தான் என்ன சொல்லும்? (உலகோர் உம்மை நிந்திக்காமலிருக்கும் பொருட்டும் வேதம் உம்மை வேறுவகையாகக் கூறாதிருக்கும் பொருட்டுமாவது அடியேனைக்காத்தருள்வீர்.)

விரிவுரை.

ஆறுமுகம் ஆறுமுகம்.......... என்றுபூதி:-

திருநீற்றைத் தரிக்கும்போது ஆறுமுகம் என்று அன்புடன் ஆறுமுறை கூறுதல் வேண்டும். அவ்வாறு தரிக்கில் உடம்புக் குற்ற பிணிகள் முதலியனவும் பேய்களின் கலக்கமும் நீங்குவதுமன்றி உயிருக்குற்ற பிறவிநோயும் விரைவில் நீங்கும். ஆதலால், ஆறுமுகம் என்று திருநீறணியும் திருத்தவர்கள் இம்மை நலன்களும் மறுமை நலன்களும் எளிதிற் பெறுவர்.

பூதி ஆகமணிமாதவர்கள் பாதமலர் சூடும் அடியார்கள் பாதமே துணை:-

மேற்கூறியபடி திருநீறணிகின்ற பெருந்தவர்களின் அடியார் களுடைய திருவடியே எந்நாளும் பற்றுக்கோடாகக் கொண்டு இருத்தல் வேண்டும். இது முத்திவீட்டில் எளிதிற் புகுத்தும் இனியவழியாம். ஆண்டவனருள் பெறுவதற்கு அவனருள் பெற்ற அடியார்பக்தியே சாலச்சிறந்த வழியென்பதை, அப்பூதி யடிகள், பெருமிழலைக்குறும்பர், கலிசைச்சேவகனர், பத்திரகிரி யார் முதலி யோர்களின் சரிதங்களை யுணர்ந்தோர்கள் அறியா திரார்கள்.

அடியார்களுக்குரிய சாதனங்களில் திருநீறு தலைசிறந்த ஒன்றும். நவநாகரீகம் தாண்டவமிடும் இக்காலத்தில் "திருநீறணி வது அவசியமா? அணிவதனுல் வரும்பயன்யாது;" என்றெல்லாம் வினவுகின்றனர். அதற்கு விடை நாம்கூற வேண்டிய தில்லை; அதன்பேரே விடைதருகிறது. "திருநீறு" திரு- தெய்வத்தன்மை, நீறு- வினைகளை நீருக்குவது என்பதாம்; எனவே வினைகளை எரித்து நீருக்கித் தெய்வத் தன்மையைக் கொடுக்கவல்லதனுல் அதற்குத் திருநீறு என்னும் அழகியதிருநாமம் அமைந்துள்ளது. மேலான ஐஸ்வரியத்தைத் தருந்தகைமை யுடையதால் "விபூதி" எனப்பெயர் பெற்றது. இம்மையில் பெருந்திருவைக் கொடுத்து மறுமையில் முத்தியையும் கொடுக்கும் இத்திருநீறு.

முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவாலவாயான் திருநீறே.

---தமிழ் வேதம்.

எல்லா நிலையினரும் அவசியமாகத் திருநீறு தரித்தல் வேண்டும். திருநீற்றின் பெருமையை விளக்குவதற்காகவே ஒரு உபநிடதம் எழுந்துளது அது "பஸ்மஜாபாலம்" என்பதாம். அதில் அடியிற் கண்டவாறு ஒருவிஷயங் குறிக்கப்பட்டுள்ளது.

யதிர் பஸ்மதாரணம் த்யக்வா ஏகதா உபோஷ்யத் வாதஸ
ஸஹஸ் ப்ரணவம் ஜபத்வ ஸூவத்தோ பரதி!!

பொருள்:— சந்யாசியும் ஒருவேளை பஸ்மதாரணம் (விபூதி தரிக்க) செய்துக்கொள்ளத் தவறுவானேல் உபவாசமிருந்து பிரணவஜபம் பன்னீராயிரத்தால் அப்பாவம் நீங்கி பரிசுத்தனாகக்கடவன்.

சிவபெருமான் எக்காலமும் நீங்காதுநின்று நிருத்தம் புரியும் நடனசாலை எது? என்றால், மூப்போதும் திருநீறணிந்துநித்தியமான பஞ்சாட்சர ஜெபம்புரியும் அன்பர்களுடைய திருவுள்ளமேயாம்.

போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை
ஓதுவார் உள்ளம் எனவுரைப்பாம்---நீதியார்
பெம்மான் அமரர் பெருமான் ஒருமான்கை
அம்மான் நின்(று) ஆடும் அரங்கு.

யாது பாதகம் புரிந்தவ ராயினும் இகழும்
பாதகங்களிற் பஞ்சமா பாதக ரெனினும்
பூதி போற்றிடில் செல்வராய் உலகெலாம் போற்றத்
தீது தீர்ந்தனர் பவத்திர ராகியே திகழ்வார்.

---உபதேசகாண்டம்.

ஆதலால் சைவப்பெருமக்களாகப் பிறக்கும் பெருந்தவம் புரிந்தயாவரும் திருநீற்றை அன்புடன் தரித்து. அதனை ஒரு பையில் உடன் வைத்திருந்து, தமதுமக்களையும் தரிக்கச் செய்து எல்லாநலன்களையும் பெறுவார்களாக. இத்திருநீற்று மகிமையை பின்னர் வருங்கட்டுரையால் தெளிக "திருவெண்ணீறு அணிகிலாதவரைக்கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே" என்ற தமிழ்மறையையும் ஓர்க.

எனமானம் உனது என்றுமோதும் ஏழைகள்:-

நாள்தோறும் இறைவனுடைய திருநாமங்களைக் கூறி "என்னுடைய மானம் உம்முடையதே" என்று சொல்லி அவனுடைய திருவடிக்கமலத்தில் மோதிக் கொள்ளும் நல்லன்பர்கள்.

வியாகுலம் ஏது? எனவினவில்:-

"இத்தகைய நல்லன்பர்களின் துன்பத்தை நாள்தோறும் கண்டிருந்தும் சர்வாந்தர்யாமி யாகிய தேவரீர் அறியாதவர்போல் "என்ன துன்பம்?" என்று கேட்பீரானால்."

எவர் புகழ்வார் ?

"உம்மை சர்வக்ஞர்" என்று எவர்தாம் புகழ்வார்கள் ? உம்முடைய பூரணத்துவத்திற்குப் பங்கம் ஏற்படுமல்லவா ?"

மறையும் என்சொலாதோ ?:—

"நீரே மூவர் தேவாதிகள் தம்பிரான் என்றும், தெய்வ சிகாமணி என்றும், எல்லாங்கடந்த இறைவன் என்றும், சமயாதீதன் என்றும் ஓலமிடுகின்ற அந்த வேதங்கள்தாம் உம்மை என்ன சொல்லா ? இவற்றை நோக்கியாவது உம்மையே கதியென்று வந்து நாள் தோறும் முறையிடுகின்ற ஏழையாகிய அடியேனை ஆண்டருள்வீர்."

எனது தீவினை எலாமடிய வேல்விடு மடங்கல் வேலா :—

" அடியேனுடைய தீவினைக் கூட்டங்களெல்லாம் அடியோடு நீங்குமாறு வேற்படையை விடுகின்ற பெருமானே!" என்றதனால் வினையாகிய மலையைத் துகளாக்கும் வண்மை அவ்வேற்படை ஒன்றுக்கேயுளது என்பது விளங்குகின்றது,

"வினை ஓடவிடுங் கதிர் வேல் மறவேன்"

"வேலுண்டு வினையில்லை"

"மடங்கல்வேலா"என்பதற்கு சிங்கத்திற்கு நிகரான வேலாயுதரே ! என்றும் பொருள் கூறலாம்.

சீறிவரு மாறவுணன் ஆவியுணும் ஆனைமுகதேவர் :

கணபதி கஜமுகனை வதைத்த வரலாறு.

முன்னொரு காலத்தில் இந்திரன் அசுரர்குலத்தை யழித்தனன். அதனால் அசுரேந்திரன் வருந்தி சுக்கிரருடன் ஆலோசித்து அவர் பணித்தவாறு, தன் அசுரகுலம் ஓங்கும் பொருட்டு, வசிட்டர் மரபில்வந்தவரும் வேதவேதாந்த பாரங்கதரும் ஞானபானுவுமாகிய மாகதர் என்னும் மாபெருந்தவமுனிவர் தவஞ்செய்யுமிடத்திற் சென்று அவருடன் கூடி தகவுடையொருமகனைப் பெறுகென"விபுதை என்னும் ஓர் அசுரகன்னியை அனுப்பினன்.

விபுதை மேருமலைச்சாரலில் மிக உக்கிரமான தவத்தைப்புரிந்து கொண்டிருக்கும் மாகத முனிவரைக்கண்டு அஞ்சி, "ஆ கொடிது! வடவாக்கினியை யணைக்கும் மேகமு முளதோ? இப்பெருந்தவரை நெருங்கவும் மயக்கவும் முடியாது; இவரைக்குறித்துத் தவஞ் செய்து எண்ணியதை முடிப்பேன்" என்று துணிவுகொண்டு சிவ மூர்த்தியைக்குறித்து அம்முனிவருக்கெதிரே தவம்புரிந்து கொண் டிருந்தாள்.

அவள் தவத்தின் பயனாய் நெடுங்காலத்திற்குப்பின் அங்கே ஓர் ஆண்யானை பெண்யானையோடு புணர, அதனை மாகத முனிவர் கண்டு மனம் சலித்து காம இச்சை கொண்டார். தவம்புரிந் திருந்த விபுதையை நோக்கி அவளது விருப்பத்தையு முணர்ந்து அவளைப் பெண்யானையாகச் செய்து தான் ஆண்யானையாகிப் புணர்ந்து இன்புற்றார். அப்பொழுது தேவர்கள் துன்புறும் வண் ணம் கயமுகன் என்னும் அசுரன் தோன்றினான். அவ்விபுதையின் உரோமங்களினின்றும் பலகோடி அசுரர்கள் தோன்றினார்கள். மாகதர் முன்னையறிவுகொண்டு வருந்தி தவமேற்கொண்டார்.

கயமுகாசூரன் அவுண சேனைகளோடும் எல்லாத்தேசங்களி லும் சென்று, மனிதர் முதலிய உயிர்களை வாரியுண்டு இந்திராதி இமையவர்கட்கு இடுக்கண்புரிந்து செருக்குற்று உலாவினான். அசு ரேந்திரனால் அனுப்பப்பட்ட சுக்ரபகவான் கயமுகனை தவஞ் செய்து பலவரங்களைப் பெறுமாறு ஏவினார். கயமுகன் மேரு வின் சாரலில் காமாதி யறு பகைவரை வென்று ஐந்தெழுத்தை ஓதி உறுதியான நிலையில் நின்று சிவபெருமானை வேண்டிப் பெருந்தவம் புரிவானாயினான். ஆயிரம் ஆண்டுகள் புற்களை யும் இலைகளையும் நுகர்ந்தும், ஆயிரம் ஆண்டுகள் தண்ணீரைப் பருகியும், ஆயிரம் ஆண்டுகள் வாயுவை நுகர்ந்தும் இங்ஙனம் மூவாயிரம் ஆண்டுகள் தவம்புரிந்து, பிராணவாயுவை எழுப்பி மூலாக்கினியை மூட்டி விந்துத்தானத்திலுள்ள அமிர்தத்தைப் பருகுவானாயினான். அவன் தவநிலையைக்கண்டு "நம்பதங்கள் அழிந்தன" என்று அமரர் அலக்கணுற்றனர். கயமுகன் பின்னும் மிக உறுதியுடன் நாற்புறத்தும் தீயை மூட்டி நடுவிலும் தீ மூட்டி அத்தீக்கு மத்தியில் நின்று பதினாயிரம் ஆண்டுகள் கடுந்

தவஞ் செய்தான். அவன் தவத்தின் வலியால் அவனுடல் வைர மணிபோல் மிளிர்ந்தது. சிவபெருமான் அவன் தவத்திற்கு இரங்கி விடையின்மீது காட்சி தந்தருளினர். கயமுகன் வணங்கி நிற்ப, கண்ணுதற் கடவுள் "யாதுவரம் வேண்டும்" என்று வினவினர். கயமுகன், "எந்தையே! எந்தஆயுதங்களாலும் சாகாத் தன்மையும், மாலயனாதி வானவர்கட்குத் தலைவனுமாறும், எல்லாவுலகங்களிலும் என்ஆணைச்சக்கரம் செல்லுமாறும், ஒருவேளை பிறர் சூழ்ச்சியால் அடியேன் இறக்கினும் பிறிதொரு பிறவியில்லாப் பேறும் தந்தருள வேண்டும்" என்று வேண்டினன். அரனர் அவ்வரத்தை வழங்கி மறைந்தருளினர்.

கயமுகாசூரன்பெருங்களிப்புற்று தருக்குற்றுநின்றான். அசுர குருவும் அசுரேந்திரனும் ஏனைய அசுரர்களும்வந்து அவனைச் சூழ்ந்துஆர்த்தார்கள். அசுரதச்சனைக்கொண்டுமதங்கமாபுரம்என்ற ஒரு நகரை உண்டாக்கி அதில் அமர்ந்து அரசுசெய்து வந்தான் அசுரேந்திரன் மகளாகிய விசித்திரகாந்தி என்பாளை மணந்து மேலும் பல கவின்மிகுங் காரிகையருடன் கலந்திருந்தான். எல்லாவுலகங்களிலும் கொடுங்கோல் செலுத்தி தேவர் முனிவர்கட்கு ஊறுசெய்துவந்தான். அநேக நாட்களுக்குப்பின் அவன் கொடுமைக்கு ஆற்றாத அரியயனாதி அமரர்கள் ஆலமுண்ட அண்ணலையடைந்து அபயம்புகுந்து முறையிட்டனர். உமாபதி "ஒருமைந்தனைத்தந்து நுங்குறைநீக்குதும்" என்றுஅருள்செய்தார்.

சிவபெருமான் ஒருசமயம் உமையம்மையாரோடு திருநந்த வனத்தில் உலாவி முடிவில் ஒரு சித்திர மண்டபத்திற் சென்றார். அம்பிகை அங்குள்ள ஓவியங்களைக் கூர்ந்து கண்ணுற்றார். அரனாது ஆணையால் அம்மண்டபத்தினடுவே ஒரு பிரணவ எழுத்தே இருவடிவு கொண்டு யானைகளாய்த் தோன்றி உமையம்மையார் காணக் கூடிற்று. அம்பிகை அரனாரை நோக்கி "இது என்னை?" என்று வினவ, பெருமான் "உமையே! எல்லாவற்றிற்கும் மூல காரணமாயுள்ள ஓரெழுத்தை நீ இச்சித்துப்பார்த்தமையால் இது நேர்ந்தது. காட்சி மாத்திரத்தில் இதனைச் செய்தற்குரிய உன்னுடையமாட்சிமையையாமன்றி வேறுஅறியவல்லார் யாவர்? உனது திருவருட் செய்கை மறைகட்கும் எட்டாததாகும்" என்று கூறியருளினர். அந்தயானைகள் இரண்டும் முன்போற் பிரணவமாயின

அப்பொழுது ஐந்து கரங்களையும், மூன்று கண்களையும், தொங்குகின்ற வாயினையும், சந்திரனைத்தரித்த செஞ்சடையையும், யானைமுகத்தையுமுடைய ஒரு புதல்வர் தோன்றியருளினர். அப்புதல்வர் அம்மையப்பரை வணங்கி நிற்க, அம்மையும் அப்பரும் அவரை எடுத்து அணைத்து ஆசிகூறி "யாவரேயாயினும் எக்கருமத்தைத் தொடங்கும்போதும் உன்னை வணங்குவாராயின் அக்கருமத்தை விக்கினமின்றிமுடித்துத் தருதி; உன்னைவழிபடாதவர் கருமத்திற்கு விக்கினஞ்செய்குதி; மால் அயன் முதலிய வானவர்கட்கும் கணங்கட்கும் நாயகனுயிருக்குதி;" என்று அருள்புரிந்தார். விநாயகர் திருக்கைலையின் வாயிலிற் பூதகணங்கள் சூழவீற்றிருந்தருளினர்.

பின்னர் திருமால் முதலிய தேவர்கள் வந்து விநாயகரை வணங்கி "எம்பெருமானே! கயமுகனை வதைத்து எமக்கு அருள் பாலிக்கவேண்டும். அவன் இட்ட தகாத குற்றேவலைச்செய்து வருந்தினேம்" என்று முறையிட்டார்கள். விநாயகக்கடவுள் "அஞ்சன்மின்" என்று அருள் புரிந்து, கதிரவன்போற் பிரகாசிக்கும் அசலன் என்பவன்மீது ஏறி பூதர்கள் சூழப் போர்க்களஞ் சென்றார். தேவர்கள் மலர்மழைச்சிந்தி ஆரவாரித்தார்கள். ஒற்றாலறிந்த கஜமுகாசூரன் ஆர்த்து அசுரசேனைகளுடன் போர்க்கு வந்தான். பூத சேனைகளால் அசுரசேனை அழிந்தது. கயமுகன் சினந்து கணைமழை சிந்தி பூதர்களையழித்தான். விநாயகக்கடவுள் கயமுகனை எதிர்த்து போர்புரிந்து அவன் வில்லையறுத்து அவனது படைக்கலங்களையெல்லாம் அழித்து, அசுரசேனைகளையும் மாய்த்தனர். கயமுகன் மீண்டுஞ் செருச்செயவந்தபோது விநாயகர் அவன் எப்படையாலும் மாளாத வரம்பெற்றுளதை நினைந்து, தமது திருக்கோட்டில் ஒன்றை முறித்து அவன்மீது விடுத்தார். அது அவனுடம்பைப் பிளந்து நன்னீர்க் கடலில் மூழ்கி பெருமான் கரத்திலமர்ந்தது. அவ்வசுரர் தலைவன் மயங்கி வீழ்ந்தான் அவன் மார்பிற்பெருகிய உதிரவெள்ளம் நதிபோற் பெருகி அருகிலுள்ள காட்டில் பரந்தமையால் அவ்விடம் திருச்செங்காடு என்று பெயர்பெற்று இன்றும் விளங்குகிறது.

சிவபெருமானது வரத்தால் சாகாவரம் பெற்ற கயமுகாசுரன் ஓர் பெருச்சாளி வடிவங்கொண்டு கோபாக்கினி சிந்த விநாயகரை

எதிர்த்துக்கொல்லவந்தான். ஐங்கரப்பெருமான் அருள்மழை சிந்தி "நமக்கு வாகனமாக இருப்பாயாக" என்று அதன்மீது ஆரோகணித்தருளினர். அதுகண்ட தேவர்கள் பூமழை சிந்திப்போற்றினார்கள். விநாயகக்கடவுள் உயிர்சிந்திய பூதர்களை எழுப்பி திருக்கைலையை அடைந்தார். பிரமாதிதேவர்கள் கணபதியை வணங்கி "யாங்கள் இதுகாறும் கயமுகன் முன் நாள்தோறும் வருந்தி இட்ட தோப்புக்கரணத்தை இன்றுமுதல் உமது திருமுன் இடுகிறேம். அங்ஙனம் உமது சந்நிதியில் அன்புடன் செவிமறித்துத் தோப்புக்கரணம்போடுபவர்கட்கு இடர்நீக்கி எண்ணியவற்றை ஈந்தருளவேண்டும்" என்று வரமிரந்தனர். ஆனைமுகப்பெருமான் அவ்வரம் நல்கி அருள்புரிந்தனர்.

பிரமதேவர் வரதா:-

பிரமாதி தேவர்களுக்கும் வரங்கொடுக்கும் வரதராஜர் முருகப்பெருமான் என்பதை " ஓம் பக்தாபீஷ்டவரதாயநம: " " ஓம் ஆச்ரி தேஷ்டார்த்த வரதாயநம: " "கலியுகவரதன் " என்பவற்றால் உணர்க.

கருத்துரை.

திருநீறு தரித்த வேலாயுதரே! உமாசுதரே! கஜமுகானுஜரே பழநியாண்டவரே! வரதரே! ஆறுமுகமேன்று நீறணியும் அடியார்க்கடியரைப்பணிந்து உம்மைத்துதித்து முறையிடும் ஏழைகளது துன்பத்தை நீக்கியருளல் வேண்டும்.

உபதேசப் பொன்மொழி.

அன்பனே!

உன்னுடைய சிறுமையையும் இறைவனது பெருமையையும் ஒவ்வொரு கணமும் உன்னுக; உன்னுந்தோறும் உன்னுந்தோறும் ஆணவப் பெருங்கல் தேயும்; அன்பு நீர் ஊற்று சுரக்கும்; உள்ளப்புலம் பண்படும்; அப்புலத்தில் இறைவனது திருவடித்தாமரை மலரும். அம்மலரைச் சென்னிமேற் சூடி இன்புறுக. " இன்பமே எந்நாளும் துன்பமில்லை "

உ

ஓம் குஹாய நம :

சிவானந்த லஹரீ

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(303-வது பக்கத் தொடர்ச்சி).

(31) நாலம் வா பரமோப காரகமிதம் த்வேகம் பசூனும் பதே
பச்யன் குக்ஷிகதான் சராசர கணுன் பாஹ்யஸ்திதான் ரக்ஷிதும்!
ஸர்வாமர்த்ய பலாய னௌஷத மதிஜ்வாலாகரம் பீகரம்
நிக்ஷிப்தம் காளம் களே ந களிதம் நோத்கீர்ணமேவத்வயா!!

பதவுரை.

பசூனும் - உயிர்களுக்கு,
பதே - தலைவரே!
குக்ஷிகதான்- வயிற்றை அடைந்தவர்களாயும்,
பாஹ்யஸ்திதான் - வெளியில் இருப்பவர்களாயுமுள்ள,
சராசரகணுன் - உயர்திணை அஃறிணைக் கூட்டங்களை,
ரக்ஷிதும் - காப்பாற்ற,
பச்யன் - (திருவருளால்) பார்க்கின்றவனுகி,
த்வயா - தேவரீரால்,
அதிஜ்வாலாகரம் - மிகுந்த வெப்பத்தைச்செய்கிறதும்,
பீகரம் - பயங்கரமானதுமாகிய,
காளம் - பாற்கடலில் தோன்றிய ஆலகால (விட) மானது,
ஸர்வாமர்த்ய பலாய னௌஷதம் - எல்லாதேவர்களுடைய ஓட்டதிற்கும் (பிணிகட்கும்) மருந்தாக இருக்குமாறு
களே - கழுத்தில்,
நிக்ஷிப்தம் - வைக்கப்பட்டது,
நகளிதம் - உள்ளே விழுங்கப்படவுமில்லை,
(ந) உத்கீர்ணமேவ - வெளியில் கக்கப்படவு மில்லை
பரமோபகாரகம் - மேலன உபகாரமாகிய,
இதம் - இது,
ஏகந்து - ஒன்றே,
நாலம்வா - தேவரீரது அருளையும் ஆற்றலையும் அறிந்து கொள்ளப் போதாதா? (போதும்)

பொழிப்புரை.

ஓ பசுபதியே! உமது வயிற்றிலுள்ள உயிர்களையும் புறத்திலுள்ள உயிர்களையும் காக்கும் பொருட்டு, மிகுந்த வெப்பத்தையும்

பயத்தையுமுடைய காலகூட விடமானது எல்லாதேவர்களுடைய ஓட்ட மாகிய பிணிக்கு மருந்தாகக் கழுத்தில் வைக்கப்பட்டது ; அது உண்ணப்படவுமில்லை ; உமிழப்படவுமில்லை. உமது அருளின் பெருக்கையும் ஆற்றலின் சிறப்பையும் அறிந்து கொள்ள இவ்வுதவியாகிய ஒருசெயலே போதாதா ?

(32) ஜ்வாலோக்[3]ர : ஸகலா மராதி[3]பய[4]த : க்ஷ்வேள : கத[2]ம்வா த்வயா
த்ருஷ்ட : கிம் ச கரே த்ரு[4]த: கரதலேகிம் பக்வஜம்பூபலம்!
ஜிஹ்வாயாம் நிஹிதச்ச ஸித்[3]த[4]கு[4]டிகா வாகண்[3]டதேசேப்ரத[4½]:
கிம் தே நீலமணிர்[4]விபூஷண மயம் ஸம்[4]போ மஹாத்மன்வத[3]!!

பதவுரை.

- சம்போ - சுககாரணனே!
- ஜ்வாலோக்ர: - வெப்பத்தால்வேகத்தைச் செய்கிறதாயும்,
- ஸகலாமராதிபயத: - எல்லா தேவர்களுக்கும் மிகுந்த பயத்தைக்கொடுக்கிறதாயுமிருக்கிற,
- க்ஷ்வேள: - விஷமானது
- த்வயா - உம்மால்,
- கதம்வா - எவ்விதமாகத்தான்
- த்ருஷ்ட - பார்க்கப்பட்டது.
- கிஞ்ச - பின்னும்
- கரே - கையில்
- த்ருத: - (எவ்விதமாகத்தான்) தரிக்கப்பட்டது?
- கரதலே - உள்ளங்கையில்,
- நிஹிதச்ச - வைக்கப்பட்டதே, (ஆகையால் அது)
- பக்வஜம்பூபலம்கிம் - என்ன பழுத்த நாவற்பழமா ?
- ஜிஹ்வாயாம் - நாவில் வைக்கப்பட்டதே ? (ஆகையால் அது)
- ஸித்த குடிகாவா - சித்தர்களுடைய குளிகையா ?
- கண்டதேசே - கழுத்தினிடத்தில்
- ப்ருத: - தரிக்கப்பட்டதே? (ஆகையால்),
- அயம் - இந்த விஷயமானது,
- தே - உமக்கு
- பூஷணம் - ஆபரணமான,
- நீலமணி: கிம் - நீலரத்தினமா என்ன
- வத - சொல்லியருள்வீர்.

பொழிப்புரை.

சம்போ! அக்னிஜ்வாலைகளின் வேகத்தையுடையதும் எல்லா அமரர்களுக்கும் பயத்தைத்தருவதுமான கொடிய விஷம் உம்மால் எப்படிப் பார்க்கப்பட்டது? கரத்தால் எப்படி ஏந்தப்பட்டது? அது பக்குவமான நாவற்பழமா? அன்றியும் நாவிலும்

DR. U.
BESANT NAGAR
MAHAM

வைக்கப்பட்டதே? சித்தகுளிகையும் ...ன? சுழுத்தியிலும் தாங்கப்பட்டது. உமக்கு அது ஆபரணமான நீலமணியா என்ன? கூறியருள்வீர்.

(33) நாலம் வா ஸக்ருதே[3]வ தே[3]வ ப[4]வத: ஸேவா நதிர்வா நுதி:
பூஜாவா ஸ்மரணம் கதா[2]ச்ரவணமப்யா லோகனம் மாத்[3]ருசாம்!
ஸ்வாமின்நஸ்[2]தி[2]ர தேவதானு ஸரணயாஸேன கிம் ல[4]ப்யதே
கர தா முக்திரித: குரோ ப[4]வதி சேத்கிம் ப்[4]ரார்தனீயம் ததா[3]!!

பதவுரை.

ஸ்வாமின் - உடையவரே!
தேவ - ஒளிர்பவரே;
பவத: - உம்முடைய,
நதிர்வா - நமஸ்காரமானாலும்
நுதி: - துதியானாலும்
பூஜாவாம் - பூஜையானாலும்
ஸ்மரணம் - நினைத்தலானாலும்
கதாச்ரவணமபி - கதையைக் கேட்பதானாலும்
ஆலோகன - பார்த்தாலும்,
ஸக்ருத் - ஒருதடவை,
ஸேவா -சேவையானது,
மாத்ருசாம் - என்னைப்போன்றவர்களுக்கு
நாலம்வா - (முத்தியைக் கொடுக்கப் போதாதா) போதும்-
இத: - இவ்வுபாயங்களன்றி,
முக்தி: - மோக்ஷமானது,
காவா - எது? (இல்லை)
குத - இவ்வுபாயங்களில் (எதனாலாவது)
பவதிசேத் - (முத்தி) உண்டாகிறதாயிருந்தால்,
ததா - அப்போது
அஸ்திரதேவதானு ஸரணயஸேன - நிலையற்றவர்களான தேவர்களை உபாசித்தலினாலுண்டாகிற முயற்சியால்,
கிம் - எது?
லப்யதே - (என்ன அவர்களிடமிருந்து) அடையப்படுகிறது?
ப்ரார்தனீயம் - (அவர்களிடமிருந்து வேண்டிப்பெறக்கூடியது
கிம் - என்னஇருக்கிறது? (ஒன்றுமில்லை)

பொழிப்புரை.

ஓ சர்வேச்வரா! உமக்குச்செய்யும் பூஜையானது காயகமான வந்தனமானாலும், வாசிகமான துதியானாலும், மானசிகமான தியானமானாலும், உமது புனித கதைகளைக் கேட்பதனாலும், உம்மைத் தெரிசிப்பதனாலும் என் போல்வார்க்குப் போதாதா? இதைவிட முத்திக்குச் சாதனமாக வேறுயாதுளது? இவ்வழிகளில் யாதாமொன்றில் மோக்ஷமுண்டாக நிலையில்லாத தேவர்களைத்துதிப்பதால் உண்டாகும் சிரமத்தால் என்ன பயனையடையக்கூடும்? அப்போது அடையவேண்டியதுதான் யாதுளது?

---(தொடரும்).

338

ஓம் குஹாய நம :

கந்தர் திருவிளையாடல்

(308-வது பக்கத் தொடர்ச்சி.)

அகத்திய முனிவருடைய கமண்டலத்தை ஐந்துகரப் பெருமான் காகவடிவுடன் சென்று கவிழ்க்கச்சென்ற காவிரிநதி, பலகாதவழிகடந்து சந்தனம் முதலிய தருக்களையும் யானைதந்தம் பொன் முத்து முதலிய உயர் பொருள்களையும் வாரிக்கொண்டு, கீழ்திசைநோக்கி விரைந்து இந்திரன் தவமியற்றும் சீர்காழிக்கு வந்து சோலையில் புகுந்தது. அதுகண்டு அமரர்கோன் ஆனந்தக் கூத்தாடினன். சிவபூஜைக்குரிய நந்தவனந்தழைத்தது. காலந் தோறும் மலர்கொய்து சிவவழிபாடுசெய்து கொண்டிருந்தான்.

இந்திரன் இங்ஙனமிருக்க சிலதேவர்கள் சூரபன்மன் கொடுமையால் வருந்தி, இத்துன்பம் எந்நாளில் எம்மை விட்டு நீங்கும் என்று ஏங்கி சீர்காழிக்குவந்து இந்திரனைப்பணிந்து, "எங்கள் அரசரே! அறநெறி சிறிதுமில்லாத அவுணர்வசத்தில் எங்களை விடுத்து நீங்கினீர்? எங்களைக்காக்கவல்லார் உம்மையன்றி எமக்கு வேறுயாருளார்? தாரகன் என்னும் யானையிடத்திலும் சிங்கமுகனென்னும் சிங்கத்தினிடத்திலும் சூரன் என்னும் புலியினிடத்திலும் தேவர்களாகிய பசுக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டு நீர் மறைந்துவந்திருப்பது நன்று? ஊனும் மீனுஞ்சுமந்து, மானங் குலைந்து ஏவல்செய்து உழல்கிறோம். சீலமும் சிவபூஜையும் எம்மைவிட்டு நீங்கின. இனிஎங்களால் இத்துன்பம்படமுடியாது; எங்கள் இடர்நீக்கி யாளும்வழியை விரைவில் தேடி யாட் கொள்ளுவீர்" என்று முறையிட்டார்கள்.

இந்திரன் "தேவர்களே! அளவருந்தவஞ்செய்த சூரனால் எமது வாழ்வும் வலியும் நீங்கின; அயிராணியைக்கைப் பற்றவும்என்னைச் சிறையிலிடவும் கருதி சூரன்பல அவுணர்களை ஏவியதால் நான் மறைந்துவந்தேன். நமக்குநலம்உண்டாதற் பொருட்டு சிவத்தைப்

பேணி தவத்தைச்செய்து கொண்டிருக்கிறன். இத்துன்பம் நீங்கும் பொருட்டுநாம் திருக்கயிலைமலைசென்று சிவபெருமானிடம் முறையிடுவோம். வாருங்கள்" என்றான். அமரர்கள்மழைகண்ட பயிர்போல் மகிழ்ந்து "இறைவரே! தாய் தந்தை குரு தெய்வம் எல்லாம் நீரே ; உம்மையன்றி வேறுதுணையில்லை. எம்மைக்காக்கும் கடன்உங்களுடையதே; எம்மை வெள்ளிவெற்புக்கு அழைத்துச் செல்லுவீர்" என்றுகூறினர்கள். இந்திரன் ஒரு சூழ்ச்சியையுன்னி தன்மனைவியிடம் போனன்.

கணவனுடைய வருகையைக்கண்ட இந்திராணி எதிர் கொண்டு பன்முறையிறைஞ்சிநின்றாள். இந்திரன் "பெண்ணரசே! சூரன் கொடுமையால் வாடிய தேவர்கள் என்னிடம் வந்து முறையிட்டார்கள். நம் துன்ப நீக்கத்தின் பொருட்டு சிவமூர்த்தியிடம் முறையிட தேவர்களுடன் கைலைமலைக்குச் செல்லுகிறேன்; விடை தருவாய்" என்றான், இந்திராணி பாணம் ஏறுண்ட மயில்போல் மயங்கி வீழ்ந்து, இடர்க்கடலில் ஆழ்ந்து அலறி வீழ்ந்தாள். இந்திரன் அவளை எடுத்து சோகத்தை மாற்றினன். மயக்கந்தெளிந்த அயிராணி நடுநடுங்கிக் கூறுவாள். "ஆருயிர்க்காதல! யான் பொன்னுலகைவிட்டு மண்ணுலகில் வனத்தில்வந்திருந்தும் உமது திருவருளால் மகிழ்ந்திருக்கின்றேன். என்னை நீர் பிரிந்தால் யான் உயிர்வாழ்வதுமுண்டா ? சக்ரவாகப் பறவைக்குச் சந்திரனும் வானம்பாடிக்கு மழையும் துணையாதல்போல எனக்கு நீரே துணைவர். தங்களைப்பிரிந்து நான்தனித்திருப்பது எப்படி? தனித்துள்ள என்னை அவுணர்கள் துன்புறுத்துவார்களே. நமது மைந்தனுகிய சயந்தனும் இங்கு இல்லை; ஐராவதமுமில்லை. பொல்லாதவரும்பழிக்கஞ்சாதவரும் பாவங்களுக்கு உறைவிடமானவரும் ஆகிய அசுரர்கள் என்னை அபகரிப்பார். ஆதலால் யான் உம்முடன் வருகின்றேன்" என்றாள். இந்திரன் சற்றுநேரம் சிந்தித்து "அன்புடையாளே! வருந்தாதே. துணையில்லையென்று கலங்கவேண்டாம். சிவபெருமானும் திருமாலும் கூடிப்பெற்ற ஐயனர் என்பவர் உன்னைக் காப்பர். அவரைத் தியானித்தால் இங்கு வருவார். அவரிடம் உன்னை அடைக்கலமாகத்தந்து நான் செல்லுவேன். அவர் உன்னைக் காத்தருள்வார். அஞ்சற்க"என்றான். இந்திராணி "நாயகரே

அந்த ஐயனுருடைய வரலாறு யாது? சொல்லும்'' என்ன, இந்திரன் சொல்லுவான்.

முன்னொரு காலத்திலே திருமால் முதலிய தேவர்கள் சிவபெருமானுடைய திருவருளின்றிப் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது அதில் ஆலகாலவிஷம் எழுந்தது. அதுகண்ட அவர்கள் அனைவரும் நடுநடுங்கி ஓடி சிவபெருமானைத் தஞ்சமடைந்து முறையிட்டனர். கண்ணுதற் பெருமான் கருணைகொண்டு அவ்விஷத்தையுண்டு தேவர்கட்குத் திருவருள் பாலித்தனர். பண்ணவர்கள் பின்னரும் விநாயகரை வணங்காது பாற்கடலைக் கடையத் தொடங்கினுர்கள். அதனுல் மந்தர மலையாகிய மத்து பாதலத்தில் ஆழ்ந்தது. விண்ணவர் வருந்தி விநாயகரை வழிபட அவரருளால் மந்தரம் எழுந்தது.

திருமால் முதலியோர் மகிழ்ந்து பின்னும் பாற்கடலைக் கடைந்தார்கள். பொற்குடத்தோடு அமிர்தம் எழுந்தது. அமிர்தம் உண்ணும் விஷயத்தில் வானவர்கட்கும் தானவர்கட்கும் போர்மூண்டது. திருமால் மூவுலகமும் விரும்பத்தக்க ஓர் மோகினி வடிவமெடுத்து "நான் ஒருவர்பங்கு அமிர்தம் ஒருவர் பங்கு'' என; அசுரர் பெண்பித்து கொண்டு "மோகினியேவேண்டு'' மென்றுர்கள். அமரர் "அமுதமே வேண்டு'' மென்றுர்கள். மோகினி அமுதத்தைத் தேவர்களுக்குப் பகிர்ந்தளித்து, அசுரர்களைப் பார்த்து "உங்களில் வீரர்யார்?'' என்ன, அசுரர்கள் தங்களுக்குள் "நானே வீரன் நானேவீரன்'' என்று பொருது அனைவரும் அழிந்தார்கள்.

திருமால் தான் முன்கொண்ட மோகினிவடிவுடன் பாற்கடலின் கரையிலிருந்தார். சிவபெருமான் தம்முடைய சத்திகள் நால்வரில் திருமாலும் ஒருசத்தியா யிருக்குந்தன்மையை நம்மனோர்க்குத் தெரிவித்தருளும் பொருட்டு, ஓர் பெருவனப்புடைய திருவடிவந்தாங்கி அவண்வந்தார். விஷ்ணு அவரைக்கண்டு காதல்கொண்டார். முக்கட்பெருமான், "உன்னைப் புணரும் வேட்கை நமக்கும் உண்டு ; நின்வடிவம் மிகவும் இனிது'' என்றுர். விஷ்ணு நாணத்துடன் "உலகமாதாவாகிய உமையம்மையார் என்றும் உம்மைக்காதலித்திருக்க தேவரீர் என்னைவிரும்பியது

என்னை ? முன்னொருநாள் பங்கயனுக்குப் படைத்தற்றொழில் கைகூடுமாறு பார்வதி தேவியைச் சேருமாறு வேண்டினேம் உமக்கு உமையம்மையாரிடத்தும் விருப்பமில்லை. நீர் மேல் நோக்கிய வீரிய முடையவரன்றோ? உமது அற்புதவிளையாட்டை அறியவல்லார் யாவர் ?" என்று கூறினர். சிவபெருமான் "திருமாலே ! நீயும் நமக்கு ஒருசத்தியே ; முன் நம்மைக் கூடிப் பிரமனைப் பெற்றாய்; வருவாய்" என்று கையாற்பிடிக்கச் சென்றார். விஷ்ணு நாணி ஓடினர். அரனர் அவரைத் தொடர்ந்து பற்றி நாவலந் தீவில் வடதிசைக் கடலோரத்திலுள்ள சால விருக்ஷநிழலில் கொண்டுபோய், அந்த மோகினியை இன்புறக் கூடினர்.

அவர்கள் இருவரும் சேரும்பொழுது கான்றுமிழ்ந்த நீர் கண்டகி என்னும் நதியாய்ப்பாய, அந்த நீரில் வச்சிரதந்தி என்னுங் கீடங்கள் உள்ளும் புறமும் சக்கரக்குறியுடன் பொன் வண்ணமாய் முறைமுறையாய் உதித்தன. அக்கீடங்கள் அந்நதி மண்ணினற் கூடுகளையுண்டாக்கி அக்கூட்டில் வாழ்ந்து மடியும்; அவை இறந்த பின் அக்கூடுகள் சக்கரக் குறியுடையவையாய் காணப்படும். அவற்றைக் கண்டகி நதிக் கரையில் ஒதுக்கிவிடும். அவற்றை உலகிலுள்ளோர் கொண்டு சென்று அவற்றினுள்ளிருக்கும் பொன்னை எடுத்து அவற்றின் அடையாளங்களைப் பார்த்து, இன்ன இன்ன மூர்த்தம் என்று உணர்ந்து விஷ்ணுவாகப்பாவித்து பூசிப்பார்கள். அதன்பெயர் சாளக்கிராமம்.

இவ்வாறு அரியும் அரனும் கூடியபொழுது, கரிய மேனியும் சிவந்த சடையும் செண்டுதரித்தகையுமாய் உக்கிரத்தோடு ஒரு குமரர் அவதரித்தார். அரனர் அப்புதல்வருக்கு அரிகர புத்திரன் என்னும் நாமத்தைச் சூட்டி, பலவரங்களை யீந்து, உருத்திரர்களுள் ஒருவராக்கி, ஒருபுவனத்தை நல்கி தேவர்களும் முனிவர்களும் வணங்கும் முதன்மையுந்தந்து, அவருக்கும் அரிக்கும் விடைதந்து மறைந்தருளினர். அரிகரபுத்திரர் தமது புவனத்தில் பூத கணங்களுடன் விளங்கிக் கொண்டிருப்பர். அவர் விண்ணவரும் மண்ணவரும் விரிஞ்சனும் வணங்கும் விசிட்ட முடையவர். விஷ்ணுவாலும் புகழத்தக்கவர். இத்தகைய

ஐயனார் என்னும் அரிகர புத்திரர் உன்னைக் காத்தருள்வர். என்று இந்திரன் கூற இந்திராணி உடன்பட்டனள்.

இந்திரன் ஐயனாரைத் தியானித்தான் அவர் பூதகணங்கள் சூழ வெள்ளை வாரணத்தின்மேல் பூரணைபுட்கலை சமேதராய் அங்கேவந்தார். இந்திரன் இறைஞ்சி நின்று, "எம்பெருமானே! சூரபன்மன் கொடுமைக் காற்றாது விண்ணுலகைவிட்டு இங்கு வந்து மூங்கில் வடிவாய் மறைந்து முக்கட்பெருமானை வழிபட்டுக் கொண்டிருக்கிறேன். அவுணர் செய்யும் அல்லலால் அலைந்து அமரர்வந்து என்பால் முறையிட்டார்கள், அவர்களுடன் அடியேன் கைலைமலை சென்று காமாரியிடம் முறையிடச் செல்லுகிறேன். அயிராணி தனித்திருக்க அஞ்சுகின்றாள். அவுணர் தன்னைக் கைப்பற்றுவர் எனமறுக்கமுறுகின்ற அவளை உம்மிடம் அடைக்கலமாகத்தருகின்றேன். தமியேன் போய்வரும் வரை இவளைக்காத்தருளும்" என்று வேண்டினான். ஐயனார் "ஆகண்டல! அஞ்சற்க; உனது மனைவியையாம் காத்து நிற்போம். நீ செல்லுதி" என்று அருளிச்செய்து ஒருபுறஞ்சென்று மகாகாளர் என்பவரை நோக்கி, "இந்திரன் கயிலை செல்கின்றான். தனித்திருக்கும் சசிதேவியை காத்துநிற்பாய்" என்று பணித்தருளினார்.

அமரர்கோமான் அயிராணியைத் தேற்றி விடைபெற்று தேவரை அழைத்துக்கொண்டு திருக்கைலாய மலைக்குச் சென்று, திருநந்திதேவரை வணங்கி தன் குறைகளைச் சொல்லி நின்றான். நந்திதேவர் "புருகூத! புரமெரித்த புரிசடைப் பெருமான் நால்வர்கட்கும் மௌன நிலையையுணர்த்திக் கொண்டிருக்கிறார். இத்தருணம் யாவரும் செல்லப்படாது" என்றார்.

இந்திரன் கேட்டு இறங்கியவிடம் மீண்டும் ஏறியதுபோல் இடருற்றுவருந்தினான். இமையவர்களும் ஏங்கினார்கள். இந்திரன் நந்திதேவரை வணகித் துதித்து "எந்தையே! சூரபன்மன் செய்த அளவற்ற அருந்தவத்தினால் அரனார் மகிழ்ந்து அளவற்ற செல்வங்களையும் ஆயுளையும் முதன்மையும் தந்தருளினர். அதனால் தருக்குற்ற சூரன் எம்மை மீன்பிடிக்கும் இழிதொழிலைக்கொடுத்து பற்பல தண்டங்களைச் செய்து துன்புறுத்துகிறான். எங்கள் தீவினை

343

உ

ஓம் குஹாய நம :

கற்பு

(311-வது பக்கத் தொடர்ச்சி)

கணவன் மனைவியை நடத்தும் முறை

கணவன் மனைவி என்னும் இருவரும் கூடி நடத்துவதே குடும்பம் எனப்படும். அக்குடும்பத்தைப் பேணி இனிது காப்பாற்றி வளர்த்து ஓங்கச் செய்யும் பொறுப்பு கணவனைவிட மனைவிக்கே அதிகமுளது. குடும்பத்திற்கு வேண்டியதைக் கணவன் வெளியில் போய் அரும்பாடுபட்டு பொருளீட்டிக் கொணருகின்றனன். அத்துடன் அவன் பொறுப்பு நீங்கிவிடுகிறது. அவ்வாறு கணவன் அரிதிற் தேடிக் கொணர்ந்த செல்வத்தை நான்கில் ஒரு பங்கு அறத்திற்கும், காற்பங்கு நாளைக்கு வேண்டுமென்ற எண்

யால் யாங்கள் இழித்தொழிலைச்செய்து இளைத்தோம். எமது குறைகளை முறையிட வந்தோம். எமது வேண்டுகோளுக்கிரங்கி வேண்டுவார் வேண்டுவதே யீயும் விரிசடைக்கடவுள் சூரனை அழித்தல்வேண்டும் அங்ஙனமழிக்கில் அவனுக்குத்தந்த வரம் பொய்க்கும். இனிஎங்கள் அல்லலை அகற்றிலரேல் அருள்வள்ளல் என்னும் புகழுக்கு இழுக்குண்டாம். ஆதலால் எமது பரிபாகத்தை நோக்கி மௌனநிலையைக்காட்டி மோன நிலையில் வீற்றிருக்கின்றார்போலும். இத்துன்பத்தை நீக்கி இன்பத்தை அருளவல்லார் சிவமூர்த்தியையன்றி வேறுயாருளர்? திருமால் தாரகனுடன் பொருது சக்கரப்படையை யிழந்தார். யான் மண்ணுலகிற் சென்றால் அவுணர் என்னைச் சிறைசெய்வர். ஆதலின், வேறு புகலிடமும் இல்லை; இறைவன் அருளை நோக்கி இங்கேயே ஒருபுடையிருப்பேன் அருள்புரிவீர்'' என்று புலம்பினன். நந்திதேவர் அங்ஙனமே அருள்புரிய, இந்திரன் இமையவருடன் வெள்ளியம் பொருப்பில் ஒருபுடையிருந்தான்.

---(தொடரும்).

ணத்துடன் இருப்பிற்கும் எடுத்து வைத்துவிட்டு அரைப்பங்கை குடும்பத்திற்குச் செலவழிக்க வேண்டும். அங்ஙனம் செலவழிக்கும் போது தக்கது எது? தகாதது எது? என்று ஆராய்ந்து அவசியமான செலவைச்செய்து குடும்பத்தைக் கண்ணுங் கருத்துமாகப் பெண்மக்கள் நடத்த வேண்டும்.

இவ்வாறு குடும்பத்தைச் சீரிய முறையில் நடத்தும் மனைவியைக் கணவனும் சீரிய முறையில் நடத்தவேண்டும். மனைவியை ஆடவர் எளிதாக எண்ணப்படாது. ஆடவர்களுக்கு ஆயுள் வளர்வதும் மனைவியாலேயே; செல்வம் வளர்வதும் மனைவியாலேயே; புகழ்வருவதும் மனைவியாலேயே; இன்பம், கல்வி, திருப்தி,பத்தி,முந்தி முதலியயாவும் கற்பின்மிக்க மனைவியாலேயே கிடைக்கின்றன. மனைவி தனக்கு செல்வம், கடவுள்,இன்பம் ஆகிய அனைத்தும் கணவனே என்று நினைக்கின்றாள். கணவன் அருகிலிருப்பதே தனக்கு சுவர்க்கலோக வாசம் என நினைத்து மகிழ்கின்றாள். கணவனையிழந்த மனைவி சகலபோகங்களையும் துறந்து துன்பவாரிதியில் மூழ்கிவிடுகின்றாள். கணவனையிழந்த மனைவி தலையிலிருந்து நீங்கியகேசத்தைப்போல் பயனற்று விடுகின்றாள் அந்தோ பரிதாபம்! நோய்வாய்ப்பட்ட கணவனையுடைய மனைவிமார்கள் "கணவன் திடவுடம்புடன் ஓடியாடி உலாவும் நிலையில் இருக்காவிடினும் படுத்த வண்ணமாகவாவது இருக்கமாட்டாரா? மஞ்சள் குங்குமத்துடன் சிலநாளைக்கு இருக்க கடவுள் அருள் செய்யமாட்டாரா?" என்றெல்லாம் பற்பலஎண்ணி ஏங்கி நிற்கின்றாள். பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்யாசம் என்னு நான்கு வகையான நிலைகளில் கிருகஸ்தமே சிறந்ததென்பது ஆன்றோர்கள் அனைவரும் ஒத்துக் கொண்டிருக்கின்றார்கள். அத்தகைய நல்லறமாகிய இல்லறம் மனைவியின்றி எவ்வாறு நடைபெறும். இத்தகையமனைவியைக் கணவன்மார் எவ்வாறு பேணிக்காப்பாற்ற வேண்டும் என்பதை சற்று பொறுமையுடன் சிந்தித்துப்பார்ப்பவர்க்கு விளங்காமற் போகாது. நிமிஷந்தோறும் மனைவியை வைவதும் ஏசுவதும் அடிப்பதுமாக இருக்கின்ற கணவனுக்கு பாவமும் பழியுமே எய்தும். மனோவேதனையும் கலக்கமும் ஏக்கமும் குடிகொள்ளும்.

அன்பர்களே! ஆதலால் இம்மைமறுமையின்பம் வேண்டும் ஒவ்வொருவருவம் மனைவியினிடம் உண்மையன்பைவைத்து அவளுடைய மனத்தைமகிழவைத்து இல்லறத்தை நல்லறமாகநடத்திவரவேண்டும். நம்முடைய கண்கள் இரண்டும் எப்படி ஒன்றையே காண்கின்றவோ அதுபோல் காதலனுங் காதலியும் ஒத்தகருத்துடையவராய் வாழவேண்டும். எந்த கருமத்தை மேற்கொண்டாலும்-தொடங்கினாலும் மாறுபாடின்றி யிருக்கவேண்டும்.

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்யவே --- ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கருண்
கண்ணிரண்டு மொன்றையே காண்

---சிவப்பிரகாசர்

கருத்து ஒருமித்து நடத்தும் வாழ்க்கையே புனிதவாழ்க்கை; அதன் இன்பமே தூயஇன்பம்; அதன்இன்பத்தை உரையாலும் எழுத்தாலும் இத்தன்மைத்தென்று உருவகப்படுத்தி சொல்லவும் எழுதவும் முடியாது. ஒத்த மனமுடன் இருந்து அனுபவித்தாலன்றி விளங்காது. இதுவேநிலைதான் பேரின்பமாகி விடுகின்றது. இறைவனும் ஆன்மாவும் இரண்டற்ற அத்துவித நிலையில் கலந்தபோது உண்டாகின்றது. அந்தநிலைஆரே அளவிடவல்லார்? இத்தகைய புனிதவாழ்க்கையின் பயனையும் இன்பத்தையும் தூய்மையையும் உணராத அநேகர் அசுத்தமும் துன்பமும் அவமுமாகிய நிலையில் தம்வாழ்க்கையை நடத்திப் பாழ்படுகின்றார்கள்.

உட்சுவரிருக்க புறஞ்சுவரைப் பூசி வர்ன மெழுதிக் கோலஞ்செய்தும் புல்லரைப் போல் மனைவியும்மக்களும் பசியாலும் உடையின்மையாலும் வருந்த தாங்கள் பரத்தையருடன் இனிது உண்டு உடுத்து உல்லாசமாக உயர்தரவண்டிகளில் உலாவியுறுகின்றார்கள், மனைவியின் மீதுள்ள ஆபரணங்களையுங் கூடபலவந்தமாகக்கழற்றி தங்கள் ஆசைப்பெண்டிராம் பொது மகளிர்கட்கு வழங்கி மகிழ்கின்றார்கள். சிலர் தாய் வீட்டாரால் போடப்பட்ட நகைகளையுங் கூட நாணமின்றி வாங்கி விற்று தகா மகளிர்க்குத் தருகின்றார்கள். அந்தோ கொடுமை! மனைவியின் திருமாங்கல்யம் தவிர மற்றவையனைத்தையும் கள்வரைப்போல் பறித்து டாம்பீகமாக செலவழிக்

கின்றார்கள். சிலர் மனைவியையும் மக்களையுந் தாய் வீட்டிற்கு அனுப்பி விட்டு வருடங்கணக்காக அவர்களைத் திரும்பியும் பார்க்காமல்- அழைத்துக் கொண்டும் வராமல், தங்கள் மனம்போல் ஒழுக்கந் தவறியமுறையில் ஒழுகிக் காலங் கழிக்கின்றார்கள். இது மிகவும் வெறுக்கத் தக்கது. இத்தகைய கொடுமை அறவே ஒழிய வேண்டும்.

இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதவளாகிய மனைவியைக் கல்வி கேள்விகளால் நிறைந்திருக்கும்படி செய்து அவளை மேலும் மேலும் நன்னெறிகளில் நடக்கச்செய்து நலம் பெறவேண்டும். இன்பமோ துன்பமோ இரண்டிலும் உடனிருந்து சலிக்காமல் உறைபவள் மனைவியே யன்றோ? பொருளிருக்கும்வரை உடனிருந்து உபசரித்து வறுமை வந்தபின் நீங்கும் இயல்புடைய வரைவின் மகளிரைப் போன்றவளா தருமபத்னி? வாழ்ந்தாலும் நல்குரவில் தாழ்ந்தாலும்நீங்காநிழல்போல் இருந்து ஒத்துழைத்து மிடியிலும் நல்லுரைகூறி உபசரிக்கும் மனைவிக்கு கணவன் என்னதான் செய்யலாகாது? ஊசியும் நூலும்போல் எந்தக் காரியத்திலும் கொழுநனும் மனைவியும் ஒருவழிபட்டு நடப்பதிலும் மேலான பெருமை இவ்வுலகத்தில் என்ன இருக்கின்றது? இங்கிதமில்லாத இல்வாழ்க்கையில் அணுத்துணையும் இன்பமிராது. ஒருவன் தன் மனைவியைத் தக்கவிதமாய் தன்னுயிர்போற் கருதிநடத்துவனேயாமாகில் அவளும் கணவனைக்கடவுளாகக் கருதி அவன்கருத்தின்படியெல்லாம் நடப்பாள் என்பதில் சிறிதும் ஐயமின்று. நெருங்கிய உறவினளாம் மனைவியை இனிமையாக நடத்தத் தெரியாதவன் வேலை ஆட்களையோ அடிமைகளையோ எவ்வாறு நடத்துவான்? பொறுமை, நாணம், மடம், பயிர்ப்பு, இன்சொல், கற்பு முதலிய நற்குணங்களையுடைய நன்மனைவியை யுடையவனுக்கு அவளை விடச் சிறந்தபொருள் வேறு என்ன இருக்கிறது?

சிலகுடும்பங்களை நினைக்கும்போது என்னை யறியாமலே என்கண்களில் நீர் பெருகுகின்றது. சிலகுடும்பத்தில் பெண்கள் முன்னும் பின்னும் போகமுடியாமல் தாமரையிலைத் தண்ணீர் போல் தத்தளித்துக்கொண்டு தருமசங்கடத்தில் அகப்பட்டுத் தவிக்கும்நிலையை உன்னுந்தோறும்உன்னுந்தோறும்உள்ளம்உருகு

கின்றது. அப்பெண்களுக்குத்தெய்வந்தான் துணைசெய்யவேண்டும். அநேகமாக பொறுமை யுடையவனுக்கு சினமுடை மனைவியும், மிகப் பொறுமையுடைய மனைவிக்கு முன்கோபியான கணவனும், படித்தவனுக்கு படியாதவளும், நன்ருகப் படித்தவளுக்கு நிரக்ஷர குக்ஷியும், கடவுள் பக்தியுடையவனுக்கு கடவுள் பக்தியில்லாதவளும், மிகச்சிறந்த பக்தியுடையவளுக்கு நாஸ்திகனுன கணவனும் இப்படியே நேர்மாருக அமைந் திருக்கின்றதைக் காணுந்தோறும் கருத்தழிகின்றது. சிலசமயம் இவ்வாறு பொருந்தாத கணவன் மனைவியைப் படைத்த பிரமனை நோகவேண்டி வருகின்றது. சில சமயம் அவர்கள் வினைப்பயனை எண்ணி மனம் ஆறுதலையடைகின்றது. இப்படியே மிகமிகஉத்தமியான ஓர்பெண்மணிக்குமிகுந்த மூடனுகிய கணவன் இருந்தான். பெண்களுக்குள் அவள் மிகவுயர்ந்தவள். அவள் கணவனே மூடர்களுக்குள் மிகவுயர்ந்தவன். இத்தகைய கணவன் மனைவியைப்பார்த்தார் ஔவைபிராட்டியார் அவர் பார்த்தகாட்சிகளை யெல்லாம் பாடலாக ஓவியப் படுத்துந் தகவுடையவர்.

அற்ற தலைபோக அருத தலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனே--வெற்று
மரமனையா னுக்கிந்த மானை வகுத்த
பிரமனையான் காணப் பெறின்.

என்றுபாடினுர்கள்.

உலகில் சிறந்த மனைவியை வுடையவனுக்கே பொன்ருப்புகழ் வரும். திருவள்ளுவருடைய மனைவியார் வாசுகி ; உலகிலேயே அவ்வம்மையார் மிகஉயர்ந்த கற்பரசியார். அவ்வம்மையாருடைய கற்பொழுக்கத்தாலேயே நாயனுருடைய வாழ்க்கை இன்பமா யிருந்த தோடு அவர்மனம் தெளிவாகவும் உல்லாசமாகவும் இருந்தது. அதனுல் அவர் இன்றும் என்றும் போற்றும் விலை மதிக்கமுடியாத திருக்குறள் மணிகளைத்தந்து நமக்கு உதவிசெய்தார். மனைவியின் துன்பத்தால் எந்நேரமும் கலக்கமிருந்தால் உயர்ந்த நூலாகிய தெய்வத்திருக்குறளை அவர் செய்திருக்க முடியாது. எனவே திருக்குறளின் உயர்வுக்கு வாசுகியம்மை கற்பொழுக்கமும் காரணமாகின்றது. ஸ்ரீராமபிரானுடைய . தோள்

வலியின் புகழுக்கும் வில்வலியின் புகழுக்கும் சீதையின் கற்பொழுக்கமே காரணமாகின்றது. அனுமான்கணையாழிதந்து "இலங்கையைப் பேர்த்தெடுத்துக்கொண்டு போய் இராகவன்முன் வைத்து நின்னையும் சேர்ப்பன்" என்று கூறிய போது, சீதை "ஏ மாருதி! இலங்கையைமட்டுமல்ல மற்றை எல்லா உலகங்களையும் "அழிக" என்று நான் சொல்லும் சொல்லினாலேயே அழித்துவிடுவேன்; அங்ஙனமழிக்கின் இராமமூர்த்தியின் தோள்வலிக்கும் வில்வலிக்கும் பெருமை யெய்தாதென்று வாளாவிருக்கின்றேன்" என்ற பொன்மொழியை நினைக்கின் எந்தக் கல்மனந்தான் உருகாது.

அல்லன் மாக்க ளிலங்கைய தாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவுமென்
சொல்லி னாற்சுடு வேனது தூயவன்
வில்லி னாற்றற்கு மாசென்று வீசினேன்.

"என்னைவிற்று கடனைக்கொடுத்து நின்சத்திய மொழியைக் காத்துக்கொள்ளுதி" என்ற சந்திரமதியின் தகவே அரிச்சந்திரன் பெருமைக்குக் காரணமாக நின்றது இன்னும் பிறவற்றையும் உன்னி உணருங்கால் கணவன் பெருமைக்கு மனைவியின் ஒழுக்கமே காரணமாகின்றது.

ஆதலால், அன்பர்கள் தங்கள் பெருமைக்குக் காரணமாயுள்ள மனைவியரை அன்பாகவும் ஆதரவாகவும் நடத்திவரவேண்டும். எந்தக்குடும்பத்தில் மனைவி மகிழ்ச்சியுடன் வாழ்வாளோ அங்கு மலர்மகள் மகிழ்ந்திருப்பள். எந்தக் குடும்பத்தில் மனைவியின் கண்கலங்கி கருத்துங் கலங்குகின்றதோ அங்கு குடும்பலக்ஷ்மி கலங்கிவிடுகின்றாள். எனவே அன்பர்கள் ஒவ்வொருவரும் மிக நுட்பமாக குடும்பத்தை நடத்தவேண்டும்.

---(தொடரும்).

உ

ஓம் குஹாயநம:

வி பூ தி

(சச்சிதானந்தம்.)

சைவசமயச் செல்வர்காள் !

விபூதியைப் பற்றி எழுதப்புகுந்த இச்செயல் நரி தன்வாலைக் கொண்டு கடலாழம் பார்ப்பதுபோல் பரிகசிப்பதற்கு இடமாகுமே யன்றி வேறில்லை. ஆனால் பக்தியின்மிகுதியால்உன்மத்தரைப்போல் ஆடுகின்றனர். ஆதலால் இச்செயலும் நகைப்புக்கு இடம்தரா தென்றே மனந்துணிந்தது. திருநீற்றைப்பற்றி எழுதத் துணிந்த போது விபூதியினிடத்தில் பற்றில்லாத அடியேனுக்கே ஒருவித ஆனந்தம் உண்டாகிறது; விபூதியின் பெருமையை சாஸ்த்திரத்தில் காணுந்தோறும் மயிர்குச்செறிவும் உண்டாகிறது. விபூதி என்னும் பதத்தையே மூலமந்திரமாக தினமும் உச்சரிக்கலா மென்று அன்பு ஏற்படுகிறதென்றால், சைவப்பெரு மக்களாகிய பெரியோர்கள் விபூதியினிடத்தில் எத்துணைப்பக்தி கொண்டிருப் பார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். வீராகமம் விபூதி யைப்பற்றிக்கூறும்பொழுது விபூதிக்குஉண்டான பெயர்களெல்லா வற்றையுங் கூறுகிறது.; அவை பஸ்மம், ரக்ஷை, பசிதம், பூதி க்ஷாரம் என்பனவாம். அமரசிம்மத்திலும் பிங்கலந்தையிலும் முறையே

பூதிர் பஸித பஸ்மநீ க்ஷாரோ ரக்ஷா-

என்றும்

பூதியோமப் பொடி விபூதி காப்புப் புண்ணிய

சாந்தம் வெண்டாது திருநீறே.

என்றும் கூறப்படுகிறது.

பஸ்மம்:- பஸ் என்றால் வறுத்தல் பிரகாசிப்பது என்று பொருள்படும் "பாபானும் ரோகாணும் மாயாபாஸஸ்ய சப்த்ஸ நாத்

பஸ்ம"என்றுகூறியபடி பாவம்ரோகம் மாயாபாசம் இவைகளை நாசஞ் செய்வதால் பஸ்மம்- ப-தானே பிரகாசிப்பது, ஸ்ம-எல்லாவற்றிலும்எனவே சர்வ ஆசாரங்கட்கும் பஸ்மம்மூலதனம்; விபூதியானது சர்வ பாபங்களையும் பக்ஷணம் செய்யுந் தன்மைத்தாற் "பஸ்மம்" என்னும் பெயர்பெற்றதாக பிருஹஜ்ஜாபலத்தில் பஸ்ம ஸர் வாகபக்ஷணாத்" என்று கூறுகிறது. அணிந்துகொண்டவர்களை ரக்ஷிப்பதால்ரக்ஷை என்றும், பிரகாசிவிக்குந் தன்மையினுற் பசிதம் என்றும்ஐஸ்வர்யகாரணாத்பூதி; என்று பிருஹஜ்ஜாபாலோபநிஷத்தில் கூறியபடி சம்பத்தைக் கொடுப்பதால் பூதிஎன்றும், தனக்கு மேலான ஐஸ்வர்ய மில்லாததினால் விபூதிஎன்றும், வி- சிவபெருமான் பூ- பாவனை தி- அடைதல் சிவதத்துவபாவனை விளக்குவது .

வேர்ப்பாவ நம்ய தோக்கியேஷாதிக்நோதீதி விபூதி ஹீ
தஸ்மாத் சிவாத்மகத்ச விபூதே கீர்த்யுதே சதா

என்றும் வாதுள ஆகமவாக்கியங்கள் தெரித்தன.

அநேக ஜன்மங்களிற் செய்த பாபங்களையும் நீருகச் செய்வதால் "நீறு" என்றும் சொல்லப்படும்.

பாபங்நாசய தேக்ருதஸ்ந-மபி ஜன்ம சதார்ஜிதம்.

---ஜாபாலம்.

விபூதி செய்கின்றமுறை.

மாதா என்பதற்கு சப்த கல்ப தருமத்தில் "மான்யதே பூஜ்யதே யாஸா" எவள் பூஜிக்கப்படுகிருளோ அவள் மாதா எனப்படுகின்ருள். லோகத்தில் எம்மதத்தினர்களும் பசுவைப் பூசிப்பதால் பசுவுக்கு கோமாதா என்று பெயர். பசு எந்த சாதியர்களுக்கும் ஆயுளுள்ளவரை பால்கொடுத்து ரக்ஷிக்கிறது. பசுக்களால் தேவர்கள் சந்தோஷிக்கின்றனர்: தருமம் நிலைபெற்றிருக்கிறது. எவ்வுலகத்திற்கும் தாயாக இருக்கிறது; கோகுலத்தில் கிருஷ்ணன் வளர்ந்ததே கோவின் பெருமையை தெரிவிக்கிறது. ஆதிசங்கரரால் புகழ்ந்து கூறிய ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் "ஆனினம் வாழ்க" என்றனர். இத்தகைய பெருமைவாய்ந்த பசுவின் சாணமே விபூதி உண்டாக்குதற்காக விதிக்கப்பட்டிருக்கிறது. வியாதியுடைய பசு,

கன்றிழந்தபசு, கிழப்பசு, மலட்டுப்பசு, மலத்தை தின்னும் பசு முதலிய குற்றங்களையுடைய பசுக்களின் சாணத்தைத் தவிர்த்து நல்லிணக்க முடையதும், பசானமென்னும் தாளை மேய்ந்ததும் ஆகிய பசுவின் கோமயத்தை பங்குனித்திங்களில் அட்டமி பௌர்ணமி சதுர்த்தசி என்னும் திதிகளில், ஓம் கபிலேபத்திரே நம: ஓம் கபிலே சுசீலே நம: ஓம் கபிலே சுமனே நம: என்னும் மந்திரத்தைக் கூறி பசுவை வணங்கி, "ஆன்மாக்களின் துன்பத்தைப்போக்கும் பயோதரத்தை யுடைய மாதாவே! இதனையேற்க" என்று ஒருபிடிபுல்லைக் கொடுத்த பிறகு கோமயம் கொள்ளவேண்டும். கோமயம் கொள்வது சாந்திகம், பௌட்டிகம், காமதம் என மூவகைப்படும். சாந்திகமாவது :-கோமயமிடும்போதே பசுவின்பின் தட்டிலேயே ஏற்பது. பௌட்டிகமாவது :.-சாணம் பூமியில் விழுமுன் தாமரையிலையில் ஏற்பது. காமதமாவது :-பூமியில் விழுந்தபின் மேல் கீழ் தள்ளி எடுப்பது; இவற்றுள் பௌட்டிகம் உத்தமம் சாந்திகம் மத்திமம் காமதம் அதமம்.

அவ்விதம் முறையே ஏந்திய கோமயத்தில் பால் ஐந்து பலம், தயிர் மூன்றுபலம், நெய் இரண்டுபலம், கோசலம் ஒருபலம் சேர்த்து, ஓம் அகோராயநம: என்று உச்சரித்து மெல்லப்பிசைந்து உண்டை பண்ணி சம்பா நெற்பதரை விரித்து அதன்மேல் ஓம் தற்புருஷாயநம: என்று உச்சரித்து ஓமாக்கினியினாலேனும் நித்யாக்கினியினாலேனும் தகனம் செய்யவேண்டும். அன்றைக்கே எடுத்து அன்றைக்கே உண்டை செய்து அன்றைத் தினத்திற்றானே தகனஞ் செய்வது உத்தமோத்தமம், பின்பு விபூதி கருகல் முதலியவற்றைத் தள்ளி நல்லனவற்றைப் பார்த்து ஓம் ஈசனாயநம: என்று எடுக்க வேண்டும். அங்ஙனம் எடுத்த விபூதியை பரிசுத்தமாகிய புதுவஸ்திரத்தினாலேவடித்துபுதுபாண்டத்திற் பெய்து காயத்ரீமந்திரத்தை உச்சரித்து சுத்த பாத்திரத்தில் சேமித்து வைக்கவேண்டும்.

விபூதி யணியும்முறை.

அம்மஹா விபூதியை உத்தூளனமாகவும் திரிபுண்டரமாகவும் அணியவேண்டும். முனிவர்களெல்லாம் உத்தூளனமாக விபூதியை யணிந்துக் கொள்வர் என்று ஆதித்ய புராணத்தில் "ஸ்ர்வாகா

லேப வேஸ்த்ரீஷும் யதீநாம் ஜலவர்ஜிதம்" என்று கூறுகிறது தேகமுழுவதும் உத்தூளனமாக விபூதியைத் தரித்துக்கொள்வது எட்டுவகை ஸ்நானத்திலொன்று; ஆக்கினேயஸ்நாநம் அதாவது விபூதிஸ்நாநம் ஆக்கினேயம்பஸ்மஸ்நாநம் என்றுசுருதியில் கூறப் படுகிறது; கங்கைமுதலிய புண்ணிய நதிகளில் கோடிதரம் ஸ்நா நம் செய்த பலம் விபூதி ஸ்நாநத்தினால் ஏற்படுகிறது.

காமிக ஆகமத்தில்

"பஸ்மஸ்நாநம் ஜலஸ்நாநாத் கோடி புண்ய குணம்பவேத்."

என்று கூறப்படுகின்றது.

சற்குருவாயிலாக தீக்ஷைப்பெற்றோர் விபூதியை திரிபுண்டரமாக அணியவேண்டும். ஒன்றோடொன்று சேராமல் இடையில்அறுந்து போகாமல் அளவுப்படி உச்சி, நெற்றி, மார்பு, தொப்புள், முழந் தாளிரண்டு, புயம்இரண்டு, முழங்கையிரண்டு, முதுகு கீழ் நடு ஒன்று ஆகபதினாறுஇடங்களில் தரிக்கவேண்டும். இதனை காமிகா கமத்திற்காணலாம். உச்சியிற்றரித்தலால் கண்டத்திற்குமேல் செய்தபாவம்நீங்கும்; நெற்றியில் தரித்தலால் நான்முகனால்எழுதப் பட்ட கெட்டஎழுத்துக்களின் தோஷம் நீங்கும்; கண்டத்தில் தரித்தலால் விலக்கப்பட்ட உணவை உண்ட குற்றம் நீங்கும்; மார்பிற்றரித்தலால் மனதினாற்செய்த குற்றம்நீங்கும்; நாபியிற் றரித்தலால் பீஜத்தினாற் செய்தவிஷய தோஷம் நீங்கும்; முழந்தாள்களிற்றரித்தலால் கால்களாற் செய்தபாவம் நீங்கும்; முதுகுகீழ் உள்ள முச்சந்திற்றரித்தலால் குதத்தினாற் செய்த பாவம் நீங்கும்; புயங்களிற்றரித்தலால் அன்னியமாதரை ஆலிங் கனம் செய்தபாவம் நீங்கும். இதனை வடமொழி ஸ்காந்தத்தில் கண்டு தெளிக.

விபூதியின் சிறப்பு.

விபூதியைத் தரிப்பதால் இம்மையிற் செய்தபாவம் நீங்குவ துடன் அநேக ஜன்மங்களிற் செய்தபாவங்களும் நீங்குகிறது.

சாதாதபஸ்மிருதியில் :---

மத்யம் பீத்வாகுரு தாராம் ச்சகத்வா
ஸ்தேயம் க்ருத்வா ப்ருஹ்ம அத்யாத் பக்ருத்வா

பஸ்மச் சங்கோபஸ்மஸ்யத்யாசயாகோ

ருத்ராட்யா யீமுச்யதே சர்வபாபை :--

கள்குடித்தல், திருடல், பிரும்மஹத்தியைச் செய்தல் முதலிய பாபங்களைச் செய்தவன் விபூதியையணிந்து உருத்திரத்தை சபித்தால் சகல பாபங்களிலிருந்தும் நீங்குகிறுனென்கின்றது,

கேண்மின் கேளுடையீர் ?

கௌதமருக்கும் அகலிகைக்கும் நடந்த விவாகத்திற் குழுமியிருந்த சகல தேவர்கட்கும் அந்த அகலிகையின் பேரழகினுல் மயங்கி அறிவையிழந்து, மோக மதிகரித்து தாது கலிதமானது. அப்பாவ பரிகாரத்தின் பொருட்டு தூர்வாசரை அடைந்து விண்ணப்பித்தனர். தூர்வாச முனிவர் விபூதியை யணிந்துக் கொள்ளும்படி கூறினர். அதுபடியே சகலதேவர்களும் விபூதியை யணிந்து அப்பாபத்திலிருந்து விடுபட்டனர். இதனை பிருஹஜ் ஜாபாலத்தில் .:-

'ஸ்ரீகௌதம விவாககாலே' என்று தொடங்கிச் சொல்லும் வசனங்களால் கண்டுத்தெளிக.

விபூதி தரிப்பதனுல் பாவத்திலிருந்து விடுபடுகிறுன், விபூதி தரிப்பதனுல் பூதப் பிரேத பிசாசு முதலியவைகள் அஞ்சி நடுங்கி அலறியோடுகின்றன. இதனை மானவ புராணம்,

திரிபுண்டர தாரணம் த்ருஷ்ட வா பூதப்ரேத புரஸ்வரா :

பீத ; ப்ரகம் பிதாச் சீக்கரம் கச்யந்த்யே வனசம்சய !

என்று முரசறைகிறது.

விபூதி தரிப்பதனுல் நோய்நீங்குகிறது ; விபூதி தரிப்பதனுல் மங்களமுண்டாகிறது ; விபூதி யணிவதினுல் சுத்தம் ஏற்படுகிறது ; மயிர், புழு, இவைகள் அடைந்த அன்னத்தில் அத்தோஷம் நீங்கும் பொருட்டு சுத்தத்திற்காக விபூதி போடுகின்றனர். விபூதியணிவதினுல் சிவனடியார்களாக ஆகின்றோம். விபூதி யணிந்து சிவசாயுஜ்ய பதவியடைந்த பெரியார்கள் எண்ணிலர்.

சுதாமன் என்னும் வேதியனும் அவன் தம்பியும் சிவனடியார்களாகிய பிரம விஷ்ணுக்களை கடிந்து ஃபசினமையால் அவர்கள் ஊமையாகவும் முடவனுகவும் சாபமிட, அதனை விபூதி

கொண்டு ததீசி முனிவர் போக்கி நற்கதி அடைவித்தனர். கூன் பாண்டியனுடைய வெப்பு நோயை விபூதியினால் ஞானசம்பந்த சுவாமிகள் தீர்த்தருளினார். மற்றபெரியார்கள் சரிதைகளை வரையப்போதிய இடமின்மையால் விடுகின்றனம். விபூதியைப்பற்றி நான்கு வேதத்திலும், அவற்றின் பிரிவுகளாகிய உபநிடதங்களிலும் ஆங்காங்கு சிறப்பித்தது மல்லாமல், விபூதியின் சிறப்பையே கூறும் எண்பத்தியேழாவது உபநிடதமாகிய ப்ஸ்ம ஜாபால உபநிடதம் என்று ஒன்று தனியாகவுளது.

நினைப்பதற்கும் ஒண்ணா சாலவும் பெருமையுடைய மஹா விபூதியை நம்சைவசமத்திற் பிறந்த ஒருசிலர் அணிவது இல்லை. விபூதி ருத்திராக்கம் அணிவது நவநாகரீகமில்லையென்றும் கூறுகின்றனர். அச்சோ! என்ன மந்தமதி? விபூதியணிவதனால் மும்மூர்த்திக்கும் தலைவனாகிய அறுமுகச்சிவனுருடைய அடியார்களென்று விளங்குகிறது. நம்மனைவி மஞ்சள் பூசுவதும், தாலிகழுத்தில் கட்டிக் கொண்டிருப்பதும் நாகரீகமில்லையென்று கழற்றி யெறிந்து விடுகின்றாளா? இல்லையே. அதுபோல் நாமும் நம்பதியின் அடையாளமாகிய விபூதியைப் பூசிக்கொள்ளவேண்டாமாநாகரீகமில்லையென்றுநினைப்பவன்பெண்களுக்கும் தாழ்ந்தவனாக வல்லவோ ஆகிறான்? எதையிட்டாலென்ன? அணியாவிட்டா லென்ன? வென்று வாய்வேதாந்தம் பேசுகின்றனர். ஐயோ! தன்நெற்றியை அவர்கள் பார்த்ததில்லைபோலும். பிரமதேவர் சிருஷ்டி செய்கையிலேயே விபூதியின் பெருமையைக்கூறி அதனையணிந்து கோடற்காகவே நெற்றியை குறுக்காகப் படைத்தார். நெடுக்காகவும் மற்றவிதமாகவும் படைக்கவில்லை. சம்சயம் உண்டானால் ஆடியின் முன்நின்று நெற்றியைப் பார்த்துக் கொள்ளட்டும். நெற்றியின் அமைப்பைப் பார்த்த பின்னரும் விபூதியணிவதனால் ஒன்றும் பிரயோஜனமில்லையென்று கூறுகின்றவனை தேர்ந்தெடுத்த மூடர்களுக்கெல்லாம் அரசனென்று கூறுவது இழுக்காகாதன்றோ? மேற்போந்த கருத்தை கூர்மபுராணம் :---

ஸ்ரஷ்டாஸ்ருஷ்டிச்சலே நாஹத்ரி புண்டரஸ்யப்ரசஸ்ததாம்
ஸஸர்ஜஸலலாடம் ஹிதிர் யங் நோர்த்த்வம் நவார்த்துலம்
ததாபி மாநவா மூர்காநதுர் வந்தித்ரிபுண்டரகம்

என்று கூறுகின்றது.

சூடாமணி நிகண்டராகிய மண்டல புருடர் தாஞ்சமண சமயத்தினரா யிருந்தும் விபூதியையே சிறப்பித்து "திருநீறே பற்பம் பொடியொடு காப்பாம் புண்ணிய சாந்தாஞ் சாணி" எனக்கூறியுள்ளார். ஔவைப்பிரட்டியார் "நீறில்லாநெற்றிபாழ்" என்றனர். ஆனால்கர்நாடகக்கிழவிசொன்னதுதானே என்று நினைக்காதீர்கள். விபூதியில்லாமல்எவன்சாப்பிடுகிறானோஅவன்நாய்மாமிசம்சாப்பிடுகிறவனிலும் தாழ்ந்தவனாகிறான் என்று வடமொழி ஸ்காந்தத்தில் கூறுகிறது. மதத்துவேஷ முடையோர் விபூதியைப் பிணச் சாம்பலென்றும், மாட்டின் மலமென்றும் பழிக்கின்றனர். அந்தந்தோ! அவ்வறியாமைக்கு என் செய்வோம்? பரிதாபம்! எரிவாய் நிரயத்திற்குஇறையாகின்றனரே? இருபிறப்பிலும்பாவஞ்செய்தோர்க்குத்தான் விபூதியினிடத்தில் த்வேஷ முண்டாகும். பஸ்மத்தைப் பார்த்தவுடன் எவர்களுக்கு கோபம் வருகிறதோ அவர் பலபெயருக்குப் பிறந்தோராவர் என்பது பண்டிதர றியத்தக்கது. என்று பிருஹஜ் ஜாபாலம் கூறுகிறது. "மஹாபாதக யுக்தாநாம்" என்றற் றொடக்கத்தில் காண்க. விபூதியை உத்தூளனமாக அணிந்து கொண்டிருப்போரைக்கண்டு 'சாம்பல் பூசிக்கொண்டா' னென்றும் "தலைவலிக்கு பத்துபோட்டுக் கொண்டா" னென்றும் எள்ளி நகையாடுகின்றனர். கலியாண பூசணிக்காய் வந்திருக்கிறதென்று பரிகாசம் செய்கின்றனர். அவர்கள் அறிவின் கூர்மையை என்னென்று எழுதுவதென்று எனக்குத்தோன்றவில்லை. அவர்களிடத்தில் என்னதானிருக்கிறதோ தெரியவில்லை.

வாசிட்டலிங்க புராணத்தில் சிவச்சின்னங்களையாவது அவற்றைத் தரித்தவரையாவது எவன் தூஷிக்கிறானோ அவன் வமிச பரம்பரையே சங்கீர்ணமாய்விடும் என்று கூறுகின்றதை "யேபஸ்மதாரிணந் த்ருஷ்டவா"-எனவருஞ் சுலோகத்தால்அறியலாம்.

சைவப்பெருமக்காள்!

மஹாபஸ்மத்தை பழிக்கின்ற பாவிகளைக்கண்டால் அவர்களுக்கு நல்லபுத்தி கற்பியுங்கள். "ஆனால் மூர்க்கனும் முதலையுங் கொண்டதுவிடா" என்பது போல் அவர்கள் பிடித்த முயலுக்கு மூன்று காலெனில் அவர்களை எதிர்க்கவேண்டும். ஒருவன் நமக்கு

இழைத்த குற்றத்தை நாம்பொறுத்தல் வேண்டும். நஞ்சைவசமயாசாரியர்களையும், சிவபெருமானையும், சிவச்சின்னங்களையும் பழித்தால் அக்குற்றத்தை நாம் பொறுப்பது தகுதியின்மையாம். அதனால் உயிர் துறக்க வரினும் அஞ்சப்படாது. அவை பதி புண்ணியமாகும். சிலர் "தெய்வத்தை தூஷிக்கிறவனுக்கு தெய்வம் கூலிதரும், நாமேன் அவர்களைக் கண்டிப்பது" என்று கூறுகின்றனர். அவை முற்றிலும் அசப்பியமான கூற்றேயாகும். தன்னை ஒருவன் பழித்தால் அஞ்ஞான்றும் கடவுள் அவனைத் தண்டிப்பானென்று இருப்பானா? ஆகவே சிவநிந்தையைக் கேட்டு வாளாவிருப்பது நன்றல்ல. தக்ஷயாகத்தில் சிவநிந்தையைக் கேட்டுவாளாவிருந்த பிரமன் முதலியோரடைந்த துன்பத்தை செப்பற்பாற்றோ? ஆனால் எதிர்க்க சக்தியில்லாவிடின் ஆண்டவனிடத்திற் சென்று குறையிரந்து கொள்வோம்.

உபதேசம்

"வைகறைத் துயிலெழு"

அன்பர்களே!

கதிரவன் உதிப்பதற்குமுன் அதிகாலையில் துயிலெழுதலினால் மனத்திற்கு உத்சாகம்,சுறுசுறுப்பு, உடல்நலம், அறிவின்வளர்ச்சி பிறநலன்களும்உண்டாகின்றன. அதிகாலையில்அறிவுதெளிந்திருக்கும்; அப்போதுள்ள உல்லாசமான தன்மை வேறுஎக்காலத்திலுங் கிடையாது; விடியற்காலத்தின் பேரின்பத்தை பறவை யினங்கள் நன்றாக அனுபவிக்கின்றன. காலையில் ஒரு வேலையைத் தொடங்கினால் விரைவில்முடியும். நான்குமணி நேரத்தில் செய்யதக்கஒரு வேலையை விடியற்காலத்தில் ஒருமணி நேரத்தில் முடித்து விடலாம்.

அதிதூக்கம் நோய்கு உறைவிடமாகும்; சோம்பலை யுண்டாகும். வறிஞராயினும் செல்வராயினு வைகறையில் எழுந்திருக்க வேண்டும்இவ்வழக்கம் இளமையிலிருந்துதே தொடங்கிவர வேண்டும். சிலர் தூக்கந் தெளிந்தபின்னும் புரண்டு புரண்டு கண்விழித்து பார்த்துப் பார்த்து உறங்குகின்றனர். இதுமிகவும் வெறுக்கத்தக்க தாம் காலையில் எழுந்து கைகால் வாய்களைத் தூய்மைசெய்துக் கொண்டு இறைவனைச் சிறிதுநேரம் தியானித்து தத்தம் தொழில்களில் புகுதல் வேண்டும்.

"அனந்தலாடேல்"